International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கொங்கு வட்டார நாட்டுப்புறப் பாடல்களில் வாழ்வியல்

**க. காமராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழ்த்துறை, கந்தசாமி கண்டர் கலைக்கல்லூரி
பரமத்தி வேலூர் - நாமக்கல்

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையிலிருந்துதான் இந்த நாட்டில் நாம் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றும் கலையும், இலக்கியமும், பண்பாடும் உருவாகின்றன. குறிப்பாக, கிராமப்புற மக்களின் வாழ்வியல்தான் நாட்டின் முன்னேற்றத்தை அடையாளப்படுத்துகிறது. இதை இம்மக்களிடம் தோன்றிய நாட்டுப்புறப் பாடல்கள் வழி அறியலாம். குறிப்பாக, கொங்கு வட்டார நாமக்கல் மற்றும் சேலம் பகுதிகளில் பாடப்படும் தாலாட்டு, தொழில், ஒப்பாரி மற்றும் பிற பாடல்கள் மூலம் பண்பாட்டையும் மரபுகளையும் காணமுடிகிறது. கள ஆய்வின் மூலம் திரட்டப்பட்ட பாடல்கள் வழி கொங்கு மண்ணின் பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல் முதலியவற்றை அறிய முடிகிறது.

**முதன்மைச் சொற்கள்**

நாட்டுப்புறவியல், இலக்கியம், பொருளாதாரம், பழமொழிகள், விடுகதைகள், கதைகள், மரபு, பண்பாடு, சமயம்

**முன்னுரை**

இலக்கியம் என்பது மனிதா;களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி. இலக்கியங்களில் காணலாகும் இன்பம், துன்பம் என எதுவாக இருந்தாலும், அதில் கலைத் தன்மையோடு உயிர்ப்பும், உணர்வும் கலந்து வெளிப்பட்டு விடுகிறது. நாட்டுப்புற இலக்கியங்கள் தனித்த ஒருவரை படைப்பாளியாகச் சுட்டி காட்டுதல் என்பது இயலாத ஒன்று. யாரோ ஒருவரின் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளின் அடிப்படை காரணமாக வெளிப்பட்டு அது அனைவரின் உணர்வுகளையும் கட்டி இழுத்துத் தன் கட்டுக்குள் வைத்துக்கொண்ட அழகினை நாட்டுப்புற இலக்கியங்களில் காண முடிகிறது.

ஓர் இனத்தின் சமூக, பொருளாதார வாழ்வியல் சிந்தனைகளை சித்தரிப்பதில் நாட்டுப்புற இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க இடத்தை பெறுகின்றன. காலம் காலமாக வழங்கி வரும் இவை, நிகழ்காலத்தையும் எதிரொலிக்கின்றன. எதிர்கால உருவாக்கத்திற்கு பெரிதும் பயன்படும் விலைமதிக்க ஒண்ணாத பாடல்கள் மூலமாகவும் அறியப்படுகின்றன. “மானுடப் பண்பாட்டை கிராமிய பண்புகள் என்றும்; (Folk culture) அறிவார்ந்த பண்பியல் (Learned culture) என்றும் கூறுவர் ” (ராஜன்.ஏ.மு., நாட்டுப்புறப் பாடல்களில் பொருளாதாரம், ப.45)

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்களே நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும். நாட்டுப் புறப்பாடல்கள் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து காணப்படக்கூடியவை. மக்களின் மனசோர்வுகளையும் தம் உள்ள உணர்வுகளையும் பாடலாகப்பாடி வெளிப்படுத்தினர்.

இந்நாட்டுப்புறப் பாடல்களைப் பலவகையாகப் பிரிக்கலாம். அவை, நாடோடிப் பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், காதல் பாடல்கள், குழந்தைப் பாடல்கள் என்பனவாகும்.

வாய்மொழி இலக்கியங்கள் என்று வழங்கப் படும் நாட்டுப்புறப்பாடல்கள் எவ்வித ஒப்பனை யும் மேற்பூச்சுகளும் இன்றி மனித வாழ்க்கையை உள்ளது உள்ளபடி விளக்கு கின்றன. மனித வாழ்விலிருந்து தோன்றி அவ் வாழ்வை விளக்கும் இப்பாடல்கள் வாழ்க்கை யோடு பிணைந்துள்ள பழக்கவழக்கங்கள், நாகரிகம், பண்பாடு, வாழ்வியல் உண்மைகள், வாழ்வின் அவலங்கள், நம்பிக்கைகள் என அனைத்தையும் குறிப்பிடுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை மனித சமூகத்தின் பல்வேறு படிநிலைகள் விளக்கப்படுகின்றன. அவ்வகையில் கொங்கு வட்டாரத்தில் காலங் காலமாக வழங்கப்பட்டு வரும் நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகளை ஆராயும் விதத்தில் இவ்வாய்வு அமைகிறது.

## நாட்டுப்புறவியல்

நாட்டுப்புறவியல் மக்களின் கலைகளையும் இலக்கியங்களையும் நம்பிக்கைகளையும் பற்றி அறிந்து கொள்வதே நாட்டுப்புறவியல் ஆகும்.

*நாட்டுப்புற வாழ்க்கை நகர்ப்புற வாழக்கை என மக்கள் வாழும் இடத்தை அடிப்படையாக வைத்து வாழ்க்கையை இரண்டாகப் பிரிப்பா;* (அந்தோணிராஜன் அழகரசன், நாட்டுப் புறப் பாடலும் பண்பாடும்,ப.121). நாட்டுப்புற வாழ்வியல் என்பதே நாட்டுப்புறம், இயல் என்று பிரித்து பார்த்தால் நாட்டுப்புறம் என்பது கிராமம், ஊரகம் என்றும், அங்கு வாழும் மக்கள் கிராம மக்கள், ஊர் மக்கள் என்றும் பொருள் தருகின்றது.

“இயல் யெனில் ஒன்றை குறித்த கருத்துக் களின் தொகுப்பாகும். நாட்டுப்புறத்தான் என்றால் பாமரம்” (Alandundes oral Literature cultural anthropology, P.76). எனவே, நாட்டுப்புறத்தான் என்றழைக்கப்படும் கிராம மக்களின் வாழ்க்கையைப் பற்றிய கருத்துக்கள் என்கின்ற நிலையில், நாட்டுப்புறவியல் என்பதே பொருத்தமாக அமைகிறது. எனவே, நாட்டுப் புறவியல் என்பதே சரியான கலைச் சொல்லாக்கம் எனலாம்.

நாட்டுப்புற இயல் ஆனது மனித சமுதாயம் எதை அனுபவித்தது, எதைக் காட்டுகிறது, எப்பயிற்சிப் பெறுகிறது என்பதை குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும். இவை அறிவியல் அறிவினின்றும் வேறுபட்டன. நாட்டுப்புற இயலின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாக பரவி உள்ளன. நாட்டுப்புற இயலின் அறிவு என்பது மனித அறிவின் கிளையாகும்.

“நாட்டுப்புற பண்பாட்டியல் என்பது கிராம மக்களின் அனுபவத்தின் பொக்கிஷம். மனித ரோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல் லாது இதயத்தோடு இதயத்தை இணைத்து வைக்கின்றது. நாட்டுப்புற மக்களின் தனித் தன்மையை குலைக்காமல் ஒற்றுமையை வளர்க்கிறது. இயற்கையோடு இயைந்து வாழும் சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான அல்லது தனிப்பட்ட உணார்ச்சிகளை அது பிரதிபலிக் கின்றது. நாட்டுப்புற இயல் என்பது உயிரோடு உள்ள புதைவடிவம் ஆகும். அது மரணமடைய மறுப்பது. “மனித சமுதாயத்தின் இலட்சக்கணக் கான ஆண்டு வாழ்வின் அனுபவங்களின் பண்பாட்டின் அறிவியலின் படிவங்கள் ஆகும்” (குணசேகரன்.கே.ஏ., நகர்சார் நாட்டுப் புறக் கதைப்பாடல்கள், ப.134)

கிராம மக்களே ஆண்டவனின் பூரண அருள் பெற்றவர்கள். அவர்கள் இதயம் மென்மை யானது. மனம் தூய்மையானது. வாக்கு உண்மையானது. அவர்கள் இருப்பிடமும் பசுமையானது. உடல் வலிமையானது. பேச்சு கள் இனிமையானவை. பழகும் தன்மை வெளி யானது. கைகள் நேர்மையானவை. காதுகள் கூர்மையானவை. கண்கள் ஒளிமயமானவை.

## நாட்டுப்புற இலக்கியம்

“நாட்டுப்புற இலக்கியங்கள் எங்கு தோன்றின, எப்போது தோன்றின என்று யாரும் எளிதில் கூறிவிட முடியாது. மனிதன் என்று தோன்றி னானோ அன்றே இந்த இலக்கியங்களும் தோன்றியிருக்க வேண்டும். அவை எழுத்து வடிவம் பெறாமல் வந்திருக்கலாம். ஆனால், *அக்கால மக்களின் உணா;வுகள் செயல் அமைப்பில் வெளிப்பட்டிருக்கும் என்பது மறக்க முடியாத மறுக்க முடியாத உண்மை* (ராமநாதன். ஆறு, நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.188)

எழுத்து இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால் நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாயத்தைக் காட்டும் கண்ணாடியாகும்.

“நாடோடி இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கையில் பிணைந்திருக்கும் இன்ப

துன்பங்களை சித்தரிக்கும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ள இலக்கியமாகும். பெரும்பாலும் இரண்டடிகளாக இணைந்த கண்ணிகளால் கேட்போருக்கும் கூறுவோருக் கும் எளிமையில் பொருள் விளங்கி மனதிற்கும் பொருளாவது ஆகும். மனதில் நிலைத்து இடம் பெறுவது. வழிநடைச் செல்வோரும் உழைப்பில் சோர்வும் தளர்வும் தோன்றாது இருக்கும் வகையில் கூடிக்கூடி பாடிப்பாடி மகிழும் பண்பு நலம் வாய்ந்தது." (அந்தோணிராஜன் அழகரசன், நாட்டுப்புறப் பாடலும் பண்பாடும், ப.101)

"வாய்மொழி இலக்கியம் உலகம் பொதுவா னது. எல்லா மக்களும் தங்களுக்கென தனியாக வாய்மொழி இலக்கியத்தை பெற்றிருக்கின்றனர். வாய்மொழி இலக்கியம் உலக பொதுமை அல்லாத எழுதப்பட்ட இலக்கியத்தோடு முரண் பாடானது" என்பார் ஆலண்டண்டி. (Alandundes oral Literature cultural anthropology,P. 123).

"நாட்டுப்புற இலக்கியங்கள் பாமர மக்களால் உருவாக்கப்பட்டு அவர்களாலேயே காப்பாற்றப் பட்டு வருபவை. அவைகளைப் பெறாத இனமோ, மொழியோ உலகில் இல்லை எனலாம். அவை வாய்மொழியாகத் தோன்றி தந்தை வழி, தந்தை வழி மகனுக்கு என்ற பரம்பரை மரபுபடி வளர்ந்து நிலைபெற்றன. வாய்மொழி இலக்கியம் அனைத்து வகையான இலக்கியங்களுக்கும் மூலம் என்கிறார் அறவாணன்" (அறவாணன்.க.ப, கவிதையில் உயிருள்ளம் உடல், ப.168)

"நாட்டுப்புற இலக்கியங்கள் பலரது கூட்டு படைப்பாக அமைந்தும் வழிவழியாக கையாளப் படும் இலக்கண வரையறுக்குட்படாமல் தோன்றி யதாகும். படைத்தவர் பெயர் தெரியாததாகவும் அச்சிடப்படாமல் எழுதப்படாமலும் உள்ளது." என்கிறார் குணசேகரன். (குணசேகரன். கே.ஏ., நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், ப.151)

இதனால் நாட்டுப்புற இலக்கியங்கள் மிகுதி யான சமுதாயச் செய்திகளை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளன. ஏட்டிலக்கியத்திற்கும் இலக்கியத்திற்கும் நாட்டுப்புற இலக்கியத்திற் கும் உள்ள வேறுபாடுகள் குறித்து ஆறு.இராம நாதன் கூறும் கருத்து இதுவாகும். ஏட்டிலக்கி யங்கள் கல்வியறிவுப் பெற்ற மனிதா;களால் படைக்கப்படுகின்றன. பெரும்பாலும் தனிமனிதர் கள் ஆட்சியாளர்களையும் செல்வந்தர்களையும் சார்ந்த வாழ்க்கை நடத்துபவர்கள் ஆவர்.

"நாட்டுப்புற இலக்கியத்தை,

1. நாட்டுப்புறப் பாடல்கள்
2. நாட்டுப்புறக் கதைகள்
3. பழமொழிகள்
4. விடுகதைகள்
5. கதைப்பாடல்கள்

என வகைப்படுத்தி ஆராயலாம் என்கிறார் சு.சண்முகசுந்தரம்." (சண்முகசுந்தரம், திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல் களில் சமுதாய அமைப்பு, ப.182)

**நாட்டுப்புறப் பாடல்கள்**

"ஒவ்வொரு மொழியிலும் எழுத்து தோன்று வதற்கு முன்பு பாடல்களும் கதைகளும் தோன்றத் தொடங்கின. நாட்டுப்புறப் பாடல் களை இயற்கைப் பாடல்கள்யெனலாம். என்று பிறந்தவை எவரால் பிறந்தவை என்று எடுத்துச் சொல்ல இயலாப் பண்பும் பாங்கும் பெற்றவை" (சக்திவேல்.சு. நாட்டுப்புறவியல் ஆய்வு.ப.18). எனவே தான் நாட்டுப்புறப் பாடல்களுக்கு தாமதமாகவே மலர்ந்து மணம் வீசும் காற்று மலர்களையும் மலையினின்று விழும் அருவியை ஒப்பிடுவர்.

"இத்தகைய நாட்டுப்புறப் பாடல்கள் உணர்ச்சி, ஓசை இன்பம், தாலாட்டு, சொல், தொடைநயம் நிறைந்தவை. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் மக்களின் உள்ளக் கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்தவை. நாட்டுப்புற மக்களின் ஆசை, நம்பிக்கை, கனவு, காதல் ஆகிய எல்லாவற் றையும் அவை பொன்னொளி வீசிப் போற்றுகின்றன" (அருணாச்சலம்.மு., காற்றில் மிதந்த கவிதை, ப.19)

நாட்டுப்புறப் பாடல்களின் தன்மையைப் பற்றி சு.சண்முகசுந்தரம் கூறுகையில், "நாட்டுப் புறத்து மக்களால் அன்றாடம் நம் வாழ்வியல் ஒவ்வொரு காலகட்டத்திலும் தொட்டில் முதல் சுடுகாடு வரை இன்பம், துன்பம், ஏக்கம், ஏமாற்றம் என்ற அனைத்து உணா;ச்சிகளும் குழந்தை தன்மை. இளமை, முதுமை என்ற எந்த பேதமும் இல்லாமல் பாடப்படும் பாடல்களை நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும்" என்கிறார்." (சண்முகசுந்தரம்.சு, நாட்டுப் புறவியல் ஆய்வு, ப.15)

நாட்டுப்புறப் பாடல்கள் மக்களில் இன்றளவும் பாடப்பட்டு வருகின்றன. கொங்கு வட்டார நாமக்கல், சேலம் பகுதிகளில் களப்பணி மூலம் சேகரிக்கப்பட்ட பாடல்கள் கீழ்க்கண்ட வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. தாலாட்டுப் பாடல்கள்

2. தொழில் பாடல்கள்
3. ஒப்பாரிப் பாடல்கள்
4. மற்றயவை

என்பனவாகும். இது கொங்கு வட்டார மக்களின் உணர்ச்சிகளும் கற்பனைகளும் வாழ்வியலோடு இணைந்து பாடப்பட்டவைகளாக உள்ளன.

1.தாலாட்டு

குழந்தைச் செல்வமே பெருஞ்செல்வம் என்று மக்கள் நினைப்பதால் ஒரு பெண் திருமணத்திற்குப் பிறகு தாய்மைப்பேற்றை விரும்புகிறாள். குழந்தையை தவமிருந்து பெற்றபின், தாலாட்டுப் பாடுகிறாள்.

**“சீரங்கம் ஆடி திருப்பாற் கடலாடி**

**மாமன் மாமாங்கமாடி மதுரை கடலாடி**

**தைப்பூசமாடி தவமிருந்து வந்தவனோ”**

இதில் குழந்தைப்பேறு அவ்வளவு சிறப்பாக பாடப்பட்டுள்ளது.

அழும் குழந்தையை தூங்க வைக்க,

**“அத்தை அடித்தாளோ அரவணைக்கும் கையாலே**

**பாட்டி அடித்தாளோ பாலூட்டும் சங்காளே**

**மாமன் அடித்தாரோ மல்லகைப்பூச் செண்டாளே**

**அக்கா அடிச்சாளோ அமுதூட்டும் கையாலே**

**அடித்தாரைச் சொல்லி அழு ஆக்கினைகள் செய்து வைப்போம்”** (மல்லிகா வயது 29, திருச்செங்கோடு) என்று பாடுகிறார்.

இப்பாடல், குழந்தைக்கு ஆறுதல் கூறி, சுற்றி உள்ளவர்களையும் புண்படுத்தாமல் மேலும் சிந்திக்க வைப்பதாக இருக்கிறது.

**“ஆராரோ ஆரிராரோ எங்க கண்ணே ஆராரோ ஆரிராரோ**

**மல்லிகை மொட்டு போல**

**உங்க அம்மா வயித்துல மலர்ந்தீங்க**

**செண்பகம் முல்லை போல செவ்வந்தியே**

**உங்க அம்மா வைத்துள்ள தங்கத்தால ஏனகட்டி”**

(பழனியம்மாள் வயது 31, மல்லசமுத்திரம்) என்ற பாடல், தன் குடும்பம் வறுமையில் வாடினாலும் குழந்தைக்கு தங்கம் மற்றும் வெள்ளியில் தூளி கட்டி ஆட வைக்கலாம் என்ற எண்ணம் தாய்க்கு தோன்றுவதாக உள்ளன.

**2. தொழிற் பாடல்கள்**

கொங்கு வட்டாரத்தில் பெண்கள் வயலில் நாற்று நடும்போது, வேலையின் சோர்வு தெரியாமல் இருக்க தொழிற் பாடல்களை பாடுவது வழக்கமாக கொண்டிருந்தனர்.

**“நாத்து நட போகையிலே**

**நானும் வாரேன் சீமையிலே**

**காத்தடிச்சா கலங்குதடி**

**கருத்த மச்சான் நானும் வாரேன்”**

(மரகதம் வயது 38, மேச்சேரி)

என்று பாடப்படுகிறது. இது காதலோடு கலந்த பாடலாக உள்ளது.

**3. ஒப்பாரிப் பாடல்கள்**

தொட்டிலில் தொடங்கிச் சுடுகாடு வரை பிறப்பு முதல் இறப்பு வரை மனிதன் பாடிப்கொண்டே இருக்கிறான். இதில் ஒப்பாரிப் பாடலும் ஒன்றாகும். ஒப்பாரியின் தன்மை, ஒப்பாரி பாடுவோர், மகன், மகள், தாய், தந்தை, கணவன், மாமியார், மாமனாரர், உடன்பிறந் தோர், பிறர் என்று ஒவ்வொருவர் இழப்பின் போதும் பெண் தன்னுடைய பாதிப்பை, உள்ளத்து எண்ணங்கள் எவ்வாறு பாடல்கள் மூலம் வெளிப்படுத்துகிறாள் என்பதை ஒப்பாரிப் பாடல்களில் அறியலாம்.

பெண்ணினத்தின் சோக உணர்ச்சியை வெளிப் படுத்தும் தன்மை பெற்றது. இறந்தவர்களை நினைத்து, அவர்களின் மீது பாடப்படும் பாடல்களே ஒப்பாரி பாடலாகும். இதற்கு தமிழில் கையறுநிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப் பாட்டு என்று பல வகையாகக் கூறுவர்.

தாய் தன் கண்முன்னே குழந்தை இறந்து கிடக்கும் நிலையைத் தாங்கிக் கொள்ளாமல், தாலாட்டி, பாலூட்டி, சீராட்டி, சிங்காரப் பாட்டிசைத்து, வளர்த்த நிலையைப் ஒப்பாரிப் பாடல் மூலம் வெளிப்படுத்துகிறாள்.

**“காலழகும் கையழகும்**

**கட்டைவிரல் லட்சணமும்**

**தோளழகும் காலழகும்**

**சுண்டுவிரல் லட்சணமும்**

**பாத்தா பசுங்கிளியா**

**பாத்தவங்க கொஞ்சு வாங்க”** (குப்பாயி வயது 39, செவ்வந்திப்பட்டி, சேலம்) என்று பாடுகிறாள். குழந்தையின் அழகை பார்ப்பவர் களின் கண் பட்டுவிடும். எனவே, திருக்ஷ்டி

சுற்றிப் போட வேண்டும் என்று தாய் எண்ணுகிறாள்.

**4. கொண்டாட்டப் பாடல்கள்**

மணமக்களை வாழ்த்த இயற்கையான மரங்கள் செடிகொடிகளை கொண்டே வாழ்த்துவது வழக்கமாக உள்ளது.

**"ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி**

**மூங்கில் போல் மகிழ்ச்சியோடு**

**வாழணும்"** (பழனியப்பன்,வயது 48, வீசாணம்)

என்று பாடப்படுகிறது. இதில், ஆலமரம் விழுது கள் கொண்டு நிற்கிறது. அருகில் தான் வளர்ந்த இடத்திலேயே கீழே வேர் படா;ந்து ஆங்காங்கே அருகும் முளைத்து வரும். மூங்கில் தன்கீழ் சந்ததிகளை வளர்த்துக் கொண்டே இருப்பது போல வாழ்க்கை அமைய வேண்டும் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

**மசக்கைப்பாட்டு**

கருத்தரித்தப் பெண்ணுக்கு பாடப்படும் பாடலே மசக்கைப் பாடலாகும்.

**ஏட்டோட தயிர் வேணும்**

**உப்பு இஞ்சி வேணும்**

**தேங்காய் வேணும்**

**காரவடை மசால்வடை கனமாக வேண்டும்**
(சாந்தி வயது 41, மோகனூர்)

என்று பாடப்படுகிறது. பெண் பத்து மாதம் குழந்தை பெற்றெடுக்கும் வரை, சுற்றியுள்ளவர் களின் செயல்களும், பத்து மாதமும் செய்யும் சடங்குகளும் அவற்றுக்கான சீர்வரிசைகளும் பற்றிப் பாட்ப்பட்டுள்ளதை தெளிவுப் படுத்துகிறது.

**கண்ணேறு கழித்தல்**

வீட்டில் உள்ள பெரியவர் ஒருவர் தன் கையில் உப்பு மிளகாய், மஞ்சள் போன்ற பொருள் களை எடுத்துக்கொண்டு வீட்டில் உள்ள மற்றவர்களை சேர்த்து நிறுத்தி வைத்துக் கையை மூன்று முறை அவர்களைச் சுற்றி இந்தப் பாடலைப் பாடுவார்.

**"முழில முட்டைத்தாலி வைக்க கண்ணுல**

**கற்பூரத்தை வைத்து காட்ட**

**ஓத்தி பார்த்தவங்க பத்திரண்டு போக**

**முழி அவிஞ்சி மோரா வடிய!"** (பார்வதி வயது 48, சோழசிராமணி, நாமக்கல்)

நிற்பவர்களை கையில் வைத்துள்ளப் பொருள்களைக் கொண்டு சுற்றி நெருப்பில் போடுவர் அல்லது வாசலில், முச்சந்தியில் போடுவர்.

**முடிவுரை**

நாட்டுப்புறப் பாடல்கள் வழி மக்களின் உரிய சிறப்புத்தன்மைகள் புலப்படுகின்றன. நாட்டுப் புறப்பாடல்கள் அங்குள்ள சில பள்ளிகளில் கற்றுத் தரப்படுவது, நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றுவதற்கு ஆதாரமாக உள்ளது. தொழில் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் மற்றும் பிறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களிடையே உள்ள வழக்காறு களாகும். கொங்கு வட்டார மக்களின் குறிக் கோள்களையும், பண்பாட்டையும், வாழ்விய லையும் எடுத்தியம்புகிறது. மனித வாழ்வின் மொழியோடு தொடா;புடைய இப்பாடல்கள், மனிதனின் சிந்தனைக்கும், உணர்வுக்கும் கற்பனைக்கும் விருந்தாய் அமைந்தது மட்டுமல்லாமல், கொங்கு வட்டார நாமக்கல் மற்றும் சேலம் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வியலை வெளிக்கொணா;கிறது.

**துணைநூற் பட்டியல்**

1. ராஜன்.ஏ.மு., நாட்டுப்புறப் பாடல்களில் பொருளாதாரம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை. 2011
2. அந்தோணிராஜன் அழகரசன், நாட்டுப்புறப் பாடலும் பண்பாடும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் வெளியீடு, மதுரை. 1999
3. அறவாணன்.க.ப, கவிதையில் உயிருள்ளம் உடல், தமிழ்க் கோட்டம், சென்னை -29. 2006
4. குணசேகரன்.கே.ஏ, நகா;சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், முல்லை பதிப்பகம், சென்னை.2009
5. ராமநாதன்.ஆறு, நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் வாழ்வியல், மெய்யப்பனார் பதிப்பகம், சென்னை. 2002
6. சண்முகசுந்தரம். சு., திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு, மனோண்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. 2006
7. சக்திவேல்.சு., நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,2000
8. அருணாச்சலம், மு., காற்றில் மிதந்த கவிதை, விடியல் பதிப்பகம், பாளையங் கோட்டை. 2010
9. Alandundes, oral Literature cultural anthropology, linkdon Publications. Chennai.1999